மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள். பழவேற்காட்டில் கருமாரி அம்மன் கோயில் இருக்கிறது. அதில் ஏதாவது விடுதி கட்டிக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட இடம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம். ஏற்கெனவே, அந்தக் கோப்பு 12 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து, புதிதாகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்து சமய அறநிலையத் துறைக்கு 125 கோடி ரூபாய்க்கு அரசு அனுமதி தற்போது வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்த சுற்றுலா மாளிகை 125 அறைகள் கொண்ட ஒரு பிரம்மாண்டமான தங்கும் விடுதி, அந்த 125 கோடி ரூபாயில் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பணிகளுக்கும் அரசின் ஒப்புதல் பெற்று, அடுத்த மாத இறுதிக்குள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதற்குண்டான அடிக்கல் நாட்டுகின்ற பணியை மேற்கொள்ளவிருக்கின்றார் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

53—

சமுதாயக் கூடம்

***4298—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், காபாலிபாறை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மார்ச் 23]

முற்பகல் 11–25

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம்.*

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், காபாலிபாறை ஊராட்சி, காபாலிபாறை கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஏதுவாக தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. இருப்பினும், ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், காபாலிபாறை ஊராட்சி, காபாலிபாறை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது தொடர்பாக ஆதி திராவிட மக்கள்தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, தேவைப்படும் நிதியொதுக்கீடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், காபாலிபாறை கிராமத்தில் போதிய இட வசதி இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மைக்கிலிருந்து கொஞ்சம் இடைவெளி விட்டு பேசுங்கள்; அப்போதுதான்* sound *வரும்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *போதிய இட வசதியும், ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியாகவும் உள்ள காரணத்தினால், நான் கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்தக் கோரிக்கையை வைத்தேன். இதைத் தவிர, பள்ளக்கால் புதுக்குடி, மாயமான்குறிச்சி, மந்தியூர்*

போன்ற கிராமங்களிலும் வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றேன். அங்கேயும் போதிய இட வசதி இருக்கின்றது; மக்கள்தொகையும் இருக்கின்றது. அங்கே கட்டிக்கொடுக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளும் இருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் பரிசீலித்து, அங்கே சமுதாய நலக் கூடங்களைக் கட்டித் தர பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த மக்கள்தொகையில் 50 சதவிகித மக்கள் தொகை ஆதி திராவிட மக்களாக இருந்தால், அங்கே சமுதாயக் கூடம் கட்டப்படும். சென்ற நிதிநிலை அறிக்கையிலே, 20 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறோம்; கிட்டத்தட்ட 15 சென்ட் இடம் தேவைப்படுகிறது. அதைப்போல சுற்றுவட்டாரத்தில் சுமார் 5 கிலோ மீட்டர் அளவிற்கு எந்தச் சமுதாய நலக் கூடமும் அமையப்பெறவில்லை என்றால், முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டம் என்ற திட்டம் அப்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, பஞ்சாயத்து வாரியாக நலத் திட்டங்கள் அப்போது செயல்படுத்தப்பட்டன. அதைப்போன்று, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் THAI Scheme மூலமாக குக்கிராமங்களுக்கு அதிகமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆகவே, என்னுடைய கேள்வி என்னவென்று சொன்னால், ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கின்ற கிராமங்களில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். இப்போது பல இடங்களில் அவர்களுக்கு சமுதாய நலக் கூடம் இல்லை; தண்ணீர் வசதி இல்லை; வீட்டுக்கு மின்சார வசதி இல்லை என்கின்ற அந்த நிலைமையைப் போக்குவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரோடு

2022 மார்ச் 23]

இணைந்து ஓர் ஒன்றியத்திற்கு, ஓர் ஆதி திராவிடர் குடியிருப்பை தேர்வு செய்து, அதை முழுமையாக முன்னேற்றுவதற்கு இந்த அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: M.L.A. fund–லே அதற்கு provision கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: தேவை ஏற்படும்பட்சத்தில், உரிய நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க இதுகுறித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றுதல் தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இதை முடித்துவிட்டு, பிறகு உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்திலும், பொது வெளியிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதிகள் குறித்தும், அவற்றை இந்த அரசு நிறைவேற்றி வருவது குறித்தும் சில கருத்துகளும், விமர்சனங்களும் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டு வருவதால், அவை குறித்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் இப்பொருள் குறித்த உண்மை நிலையை விளக்கும் வகையில், உங்கள் அனுமதியுடன்